திமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**திருச்சுழி அருகே பூண்டு விவசாயம் அமோகம்**

First Published : 06 Aug 2011 02:21:24 PM IST

Last Updated : 06 Aug 2011 03:13:32 PM IST

காரியாபட்டி, ஆக. 5: திருச்சுழி பகுதியில் சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்த மழையைப் பயன்படுத்தி நெல் விவசாயத்தை நம்பி இருக்காமல், தக்கைப் பூண்டு விவசாயத்திற்குத் தயாராகி வருகின்றனர் விவசாயிகள். இதற்காக ஏக்கருக்கு 15 கிலோ வீதம் விதை நடவு செய்து வருகின்றனர். இச்செடி 3 அடி உயரம் வளர்ந்தவுடன் இயந்திரக் கலப்பையால் உழுது தண்ணீர் பாய்ச்சி நெல் நடவு செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தற்போது அப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**வேளாண் அறிவியல் மையத்தில் ஐந்தாண்டுக் குழுவினர் ஆய்வு**

First Published : 06 Aug 2011 12:25:35 PM IST

பெரம்பலூர், ஆக. 5: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஐந்தாண்டுக் குழுவினர் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டு, வேளாண் அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

இந்த நிகழ்ச்சிக்கு ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கி. வரதராஜன் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் ஐந்தாண்டுக் குழு தலைவர் முனைவர் மிருத்யுஞ்சயா, வேளாண் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசினார்,

நிகழ்ச்சியில் உதய்ப்பூர் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் மாலிவால், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக எட்டாவது மண்டலத் திட்ட இயக்குநர் முனைவர் பிரபுகுமார், முதன்மை விஞ்ஞானி முனைவர் சாய்ராம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் கலைச்செல்வன், பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சி. சிவக்குமார், பல்கலைக் கழக முனைவர் மனோகரன், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பாஸ்கர், ஆனந்த் மற்றும் மாவட்ட நீர்வடிப் பகுதி துணை இயக்குநர் மணிமாறன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் செப்ந்தர்ராஜன், நபார்டு வங்கி மேலாளர் கோதண்டபாணி ஆகியோர் பேசினர்.

பின்னர் நடைபெற்ற கலந்தாய்வு நிகழ்ச்சியில் வேளாண்மையில் ஏற்படும் பிரச்னைகள், அதற்கு தீர்வு காண்பதில் வேளாண் அறிவியல் மையத்தின் பங்கு குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை, வேளாண் மையத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சி. சங்கர், கதிரவன், விஜயலட்சுமி, சிவக்குமார், மணிகண்டன் ஆகியோர் செய்திருந்தனர்.

முன்னதாக, வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. மாரிமுத்து வரவேற்றார். பூலாம்பாடி திருவள்ளுவர் உழவர் மன்ற விவாதக் குழுத் தலைவர் கு. வரதராஜன் நன்றி கூறினார்.

**விவசாயிகள் கலந்துரையாடல்**

First Published : 06 Aug 2011 11:53:39 AM IST

Last Updated : 06 Aug 2011 03:12:38 PM IST

கடலூர், ஆக. 5: வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை சார்பில் நீர்வள நிலவள திட்டத்தில், கெடிலம் உபவடிநிலப் பகுதி விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி கடலூரில் புதன்கிழமை நடந்தது.

நிகழ்ச்சியில் நெல், அரிசி தயாரிப்பில் விவசாயிகளின் பங்கு, வேளாண் விளைபொருள்களுக்கு சரியான விலை கிடைத்தல், வேளாண் விளைபொருள் விற்பனையில் விவசாயிகளின் பங்கு, சவுக்கு மரங்கள் நேரடி வாணிபம், வேளாண் விளைபொருள்களின் மதிப்புக் கூட்டுதல், வாழை விவசாயத்தில் மதிப்புக் கூட்டுதல், வாழை நார் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு தொழில் நுட்பங்கள் குறித்து, வேளாண் அலுவலர்கள், வணிகர்களைக் கொண்டு விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. செயல்முறைகள் குறித்து படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது

நிகழ்ச்சிக்கு வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை துணை இயக்குநர் நா.தனவேல் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சுரேஷ் வரவேற்றார். விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**பி.டி., பருத்தி விதை விலை அதிகரிப்பு நங்கவள்ளி பகுதி விவசாயிகள் விரக்தி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,01:20 IST

மேட்டூர் : பருத்தி விலை வீழ்ச்சியடைந்த நிலையில், நடப்பாண்டில் பி.டி., பருத்தி விதைகள் விலை அதிகரித்துள்ளது. இது, விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது. நங்கவள்ளி, ஜலகண்டபுரம், தாரமங்கலம் சுற்றுப்பகுதியில், ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்து வருகின்றனர். மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி., (பேசிலஸ் துரியன்ஸிஸ்) பருத்தி விதைகளை தனியார் நிறுவனங்கள் அறிமுகம் செய்தன. பி.டி., பருத்தி செடிகளில் காய் புழு தாக்குதல் குறைவாக இருந்ததால், பெரும்பாலான விவாயிகளுக்கு கூடுதல் மகசூல் கிடைத்தது. இந்நிலையில், பி.டி., பருத்தி விதைகள் விலை அதிகரித்துள்ளது, விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து நங்கவள்ளி பகுதி விவசாயிகள் கூறியதாவது: கடந்த இரு ஆண்டுகளாக, 750 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பி.டி. பருத்தி விதைகளை, தனியார் நிறுவனங்கள் சமீபத்தில், 930 ரூபாயாக உயர்த்தி விட்டன. 450 கிராம் விதைக்கு, 180 ரூபாய் அதிகரித்துள்ளது. ஒரு ஏக்கருக்கு, 900 கிராம் விதை தேவைப்படும். அதன்படி ஒரு ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய, 360 ரூபாய் கூடுதலாக கொடுத்து விதை வாங்க வேண்டியுள்ளது. நடப்பாண்டில் பருத்தி விலை கடுமையாக வீழ்ச்சியடைந்து விட்டது. பருத்தி விலை வீழ்ச்சியடைந்த நிலையில், பி.டி., பருத்தி விதைகள் விலை அதிகரித்துள்ளது எங்களுக்கு அதிர்ச்சியாக உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வேளாண் சார் நிறுவனங்கள் துவங்க ஊக்குவிப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,01:33 IST

ஈரோடு: கோபி, கலிங்கியத்தில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில், வரும் 17ம் தேதி காலை 9.30 மணிக்கு, தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம் நடக்கிறது. மத்திய அரசின் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் இயங்கி வரும் மேம்பாட்டு நிலையம் மூலம் இம்முகாம் நடக்கிறது. வேளாண் சார் சிறு தொழில் நிறுவனங்கள் துவங்க, ஆறு வார கால தொழில்

முனைவோர் பயிற்சிக்கு, தகுதியானவர்கள் இம்முகாமில் தேர்வு செய்யப்படுவர். எஸ்.எஸ்.எல்.ஸி., தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் அதற்கு மேல் தகுதி உள்ளவர்கள், 18 முதல் 45 வயதுக்கு உட்பட்டவர்கள், சிறு தொழில் நிறுவனம் துவங்க திட்டத்துடன் உள்ளவர்கள், இம்முகாமில் பங்கேற்கலாம். ஊக்குவிப்பு முகாமில் பங்கேற்க கட்டணம் ஏதுமில்லை. சிறந்த முறையில் பயிற்சி முடித்து, தொழில் துவங்குவோருக்கு, அரசு மூலம் கடன் பெற பரிந்துரைக்கப்படும். முகாமில் பங்கேற்க விருப்பம் உள்ளவர்கள், 16ம் தேதிக்கு முன்பாக, "உதவி இயக்குனர், எம்.எஸ்.எம்.இ., 386, பட்டேல் சாலை, ராம் நகர், கோவை - 641009, ஃபோன் - 0422 2233956, 2230426, 94434 70062' மற்றும் "திட்ட ஒருங்கிணைப்பாளர், எம்.ஒய்.ஆர்.ஏ.டி.ஏ., வேளாண் அறிவியல் நிலையம், 272 பெருமாள் நகர், புதுவள்ளியம்பாளையம் ரோடு, கலிங்கியம் அஞ்சல், கோபி, ஈரோடு மாவட்டம், ஃபோன் - 04285 241626, 241627' என்ற விலாசத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இத்தகவலை உதவி இயக்குனர் சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

**தொடர் மழை: அணைகளின் நீர்மட்டம் உயர்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,01:19 IST

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையால் சோலையாறு, பரம்பிக்குளம் அணைகளில் இருந்து உபரி நீர் தொடர்ந்து வெளியேறுகிறது.மேற்கு தொடர்ச்சி மலையில் வால்பாறை, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்கிறது. இதனால், சோலையாறு, பரம்பிக்குளம் அணைகள் நிரம்பியுள்ளன. இந்நிலையில், மழை தொடர்வதால் அணைகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில் 71.54 அடி நீர்மட்டம் உள்ளது. அணையின் முழுக்கொள்ளளவும் நீர் நிரம்பியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 1,467 கனஅடி தண்ணீர் வரத்துள்ளது. அணையில் இருந்து தூணக்கடவு டனல் வழியாக 100 கனஅடி தண்ணீரும், ஸ்பில்வே மதகுகள் வழியாக 2,058 கனஅடி தண்ணீரும் வெளியேறுகிறது. அணைக்கு வரும் தண்ணீர் முழுமையாக வெளியேற்றப்
படுகிறது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில் 106.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 494 கனஅடி தண்ணீர் வரத்தாகவும், 186 கனஅடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது. திருமூர்த்தி அணையில் 33.48 அடியும், அமராவதி அணையில் 54.49 அடியும் நீர்மட்டம் உள்ளது.நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்): சோலையா று- 23, பரம்பிக்குளம்- 27, மேல்நீராறு- 81, கீழ்நீராறு- 32, வால்பாறை- 28, மேல்ஆழியாறு- 1, காடம்பாறை- 2, வேட்டைக்காரன்புதூர்- 2, மணக்கடவு- 2, தூணக்கடவு- 7, பெருவாரிப்பள்ளம்- 3.

**தோட்டக்கலைஅதிகாரி ஆய்வு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,22:48 IST

பழநி:தொப்பம்பட்டி பகுதியில், தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன் ஆய்வு செய்தார். தேசிய தோட்டக்கலை திட்டத்தில் மா, நெல்லி, கொக்கோ நடவுப் பணிகள், பராமரிப்பு முறை ஆய்வு செய்யப்பட்டது. உதவி இயக்குனர் தங்கச்சாமி, துணை அலுவலர் வெங்கட்ராமன், வேளா ண் உதவி அலுவலர்கள் கணேசன், ரத்தினவேல், பாலகிருஷ்ணன் பங்கேற்றனர்.

**பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவுசெய்ய விவசாயத்துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,22:27 IST

வருஷநாடு:பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்யுமாறு விவசாயத்துறை அறிவுறுத்தி உள்ளது.விவசாய உதவி இயக்குனர் சங்கரன் கூறியதாவது: கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, மூலக்கடை, முத்தலம்பாறை, வாய்க்கால்பாறை,வருஷநாடு, தங்கம்மாள்புரம், வாலிப்பாறை, முருக்கோடை, தும்மக்குண்டு, கோம்பைத்தொழு, குமணந்தொழுவில், மானவாரி மற்றும் தோட்ட விவசாயம் அதிகம் உள்ளது. விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர (1ஏக்கர்) மக்காச்சோளத்திற்கு 40 ரூபாய், பருத்திக்கு 260, பயிறு வகைகளுக்கு 35 வீதம், கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மையமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தி உறுப்பினராக பதிவு செய்து கொள்ளலாம்.

வெள்ளம்,வறட்சி,நோய் தாக்குதலால் மகசூல் இழப்பு ஏற்பட்டால், பதிவு செய்த விவசாயிகளுக்கு அதற்கான மொத்த இழப்பீட்டு தொகையையும் வங்கியில்,பெற்று கொள்ளலாம்.விபரங்களுக்கு கடமலைக்குண்டு விவசாய அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம், என்றார்.

**குவிண்டாலுக்கு ரூ. 100 குறைந்தது வத்தல் மைதாவும் மூடைக்கு 625 ரூபாய் குறைந்தது**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 06,2011,21:42 IST

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் மைதாவிலை மூடைக்கு 625 , பொரிகடலை மூடைக்கு 140 ,மிளகாய் வத்தல் குவிண்டாலுக்கு 100 ரூபாய் குறைந்துள்ளது.

விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை மூடைக்கு 2,875 , கடலெண்ணெய் டின்னுக்கு 1,580 , சூரிய காந்தி எண்ணெய் 1,230 , பாமாயில் 935 ரூபாயாக உள்ளது. நிலக்கடலைப் பருப்பு 4,600, கடலைப் புண்ணாக்கு மூடை 3,100 ரூபாயாக உள்ளது. உளுந்து மூடைக்கு 4,700, சுமார் ரக

உளுந்து 3,700 , பர்மா பருவட்டு உளுந்து 4,200 ரூபாயாக உள்ளது.

நயம் உளுந்தம் பருப்பு 6,400, பர்மா பருவட்டு பருப்பு 5,600 , துவரை 3,900 , பொடி துவரை 3,100 ரூபாயாக உள்ளது. துவரம் பருப்பு 5,700 , பொடி துவரம் பருப்பு 3,600 , பாசிப்பயறு 5,600 , லயன் பருவட்டு 3,900 ,சுமார் ரகம் 3,200 ரூபாயாக உள்ளது. பாசிப்பருப்பு 5,200 , சுமார் ரகம் 4,800 ரூபாயாக உள்ளது. ரவை 2,310 , மைதா 2,875 லிருந்து 2,250 ரூபாயாக குறைந்துள்ளது. கொண்டைக்கடலை 3,200 ,பொரிகடலை 2,280 லிருந்து 2,140ரூபாயாக குறைந்துள்ளது. மிளகாய் பழைய வத்தல் குவிண்டாலுக்கு 7,600 லிருந்து 7,500 ரூபாயாக குறைந்துள்ளது. பழைய சோடை வத்தல் 2.200 ரூபாயாக உள்ளது.

" மார்க்கெட்டில் பருப்பு விற்பனை அதிகம் இல்லாததால்,இதன் விலையில் மாற்றம் இல்லை.அதே நேரத்தில் அடுத்த வாரத்தில் கடலை வரத்து துவங்கும் என்பதால், எண்ணெய் விலை குறைய வாய்ப்புள்ளது. மிளகாய் வத்தல் வரத்து குறைந்துள்ள நிலையில், புது வத்தல் வரத்து ஆவணியில் துவங்குவதாக ,' வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சென்ற ஜூலை மாதத்தில் புண்ணாக்கு ஏற்றுமதி 13 சதவீதம் உயர்வு**

ஆகஸ்ட் 06,2011,00:18



புதுடில்லி: நாட்டின் புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற ஜூலை மாதத்தில், 13 சதவீதம் அதிகரித்து, 2.41 லட்சம் டன்னிலிருந்து, 2.72 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர் - அக்டோபர்), ஜூலையுடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களில், புண்ணாக்கு ஏற்றுமதி, 45.42 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.

இது, கடந்த எண்ணெய் பருவத்தின், இதே காலத்தை விட, 85 சதவீதம் (24.58 லட்சம் டன்) உயர்வாகும்.எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதால், நடப்பு எண்ணெய் பருவத்தில், புண்ணாக்கு ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்து வருவதாக, எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், இந்திய புண்ணாக்கிற்கான தேவை, மிகவும் அதிகரித்து வருகிறது. 2010-11ல் பயிர் பருவத்தில் (ஜூலை- ஜூன்), நாட்டின்

எண்ணெய் வித்துகள் உற்பத்தி, 31.10 லட்சம் டன்னாக மிக அதிகளவில் உயர்ந்துள்ளது.இந்தியாவிலிருந்து, ஜப்பான், சீனா, வியட்நாம், மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளுக்கு, அதிகளவில் புண்ணாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

**ஜூன் வரையிலான 6 மாதங்களில் நாட்டின் தேயிலை உற்பத்தி 5.7 சதவீதம் அதிகரிப்பு**

ஆகஸ்ட் 06,2011,00:17



குன்னூர்: நடப்பு 2011ம் காலண்டர் ஆண்டில், ஜூன் மாதம் வரையிலான ஆறு மாத காலத்தில், நாட்டின் ஒட்டு மொத்த தேயிலை உற்பத்தி, கடந்தாண்டு இதே காலத்தை விட 1.93 கோடி கிலோ அதிகரித்து 35.83 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. ஆக, தேயிலை உற்பத்தி 5.7 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது.இதே மாதங்களில், வட இந்தியாவில் தேயிலை உற்பத்தி 2.4 கோடி கிலோ அதிகரித்து, 21.23 கோடி கிலோவில் இருந்து, 23.62 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது.

வட இந்தியாவில், அசாம் மாநிலத்தின் கச்சார் பகுதி நீங்கலாக, அனைத்து பகுதிகளிலும் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது.அதே சமயம், தென்னிந்தியாவில் தேயிலை உற்பத்தி 45.50 லட்சம் என்ற அளவில் குறைந்து காணப்பட்டது.சென்ற ஜூன் மாதம், தேயிலை உற்பத்தி, கடந்த ஆண்டு இதே மாதத்தை விட 1.06 கோடி கிலோ அதிகரித்து, 11.48 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. இது, 10.26 சதவீதம் அதிகமாகும்.எனினும், நடப்பு நிதியாண்டில் உள்நாட்டில் தேயிலை பற்றாக்குறை 12 கோடி கிலோ அளவிற்கு இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கென்யாவின் தேயிலை உற்பத்தி குறைந்து 3.70 கோடி கிலோ என்ற அளவிற்கே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம், சர்வதேச சந்தையில் தேயிலைக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனால் தேயிலை விலை உயர்ந்து வருகிறது. சென்ற 2010-11ம் நிதியாண்டில், உள்நாட்டில் தேயிலை உற்பத்தி 96 கோடி கிலோவாக இருந்தது. இது, முந்தைய நிதியாண்டின் உற்பத்தியை விட 3 கோடி கிலோ

குறைவாகும். ஒட்டுமொத்தமாக, சென்ற ஆண்டில் தேயிலை பற்றாக்குறை 9 கோடி கிலோ என்ற அளவிற்கு இருந்தது.தேயிலை பயன்பாடு 3-3.5 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து, நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 3 கோடி கிலோ தேயிலை தேவைப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து ஒட்டுமொத்த தேயிலை பற்றாக்குறை 12 கோடி கிலோவாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

---

## வெளிநாடுகளில் விலை சரிவு கோதுமை ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் குறைகின்றன

அமிதி சென்

புதுடெல்லி

வெளிநாடுகளில் கோதுமை விலை சரிவடைந்துள்ள நிலையில் கோதுமை ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் பெரிதும் குறைந்து விட்டன.

சர்வதேச சந்தையில் ஒரு டன் கோதுமை விலை 250 டாலராக உள்ளது. அதே சமயம் இந்தியாவில் விலை 360 டாலராக உள்ளது. சர்வதேச சந்தை விலையில் கோதுமையை ஏற்றுமதி செய்ய வேண்டுமானால் வர்த்தகர்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய மத்திய அரசு மானியம் வழங்க வேண்டும். ஆனால் மானியம் வழங்கி கோதுமை ஏற்றுமதியை ஊக்குவிக்கத் தயாராக இல்லை என மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கோதுமை உற்பத்தியும், கையிருப்பும் அதிகரித்துள்ள நிலையில் உபரியாக உள்ள கோதுமையை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கலாம் என மத்திய வேளாண் அமைச்சகம் கருதுகிறது. இது தொடர்பாக மத்திய அமைச்சகங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன.

இன்றைய சூழலில் பணவீக்கம் பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. எனினும் ஜூலை 11–ந் தேதி கூடிய அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் குழு, செப்டம்பர் மாதத்தில் புதிதாக கோதுமை கொள்முதல் தொடங்கும்போது, ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்க முடிவு

*செய்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக கோதுமை ஏற்றுமதிக்கு தடை இருந்து வருகிறது. தடை நீக்கப்படுவதற்கான சூழல் உருவாகி வரும் வேளையில் வெளிநாடுகளில் கோதுமை விலை சரிவடைந்துள்ளது ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பெரிதும் குறைத்து விட்டது.*

## *பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவில், தேயிலை உற்பத்தி 12 கோடி கிலோ குறையும் நிலை*



*சுதானுகா கோசல்*

*கொல்கத்தா*

*இந்தியாவில் தேயிலை பயன்பாடு அதிகரித்து வரும் நிலையில், நடப்பு ஆண்டில் தேயிலை உற்பத்தி 12 கோடி கிலோ சரிவடையும் சூழ்நிலை உருவாகி உள்ளது. தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகித்து வரும் கென்யாவிலும் உற்பத்தி குறையும் நிலை ஏற்பட்டுள்ளதால் சர்வதேச சந்தையில் தேயிலை விலை உயருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதனால் தேயிலை நிறுவனங்களின் வருவாய், லாபம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*96 கோடி கிலோ*

*நம் நாட்டில், கடந்த 2010–ஆம் ஆண்டில் 96 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இது, முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது சுமார் 3 கோடி கிலோ குறைவு என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற ஆண்டில் கையிருப்பும் 6 கோடி கிலோ குறைவாக இருந்தது. இதனால் ஒட்டுமொத்த அளவில் தேயிலை பற்றாக்குறை 9 கோடி*

கிலோவாக இருந்தது.

இந்நிலையில் இந்தியாவில் தேயிலை நுகர்வு 3–3.5 சதவீதம் வளர்ச்சி கண்டு வருகிறது. எனவே நடப்பு ஆண்டில் மேலும் 3 கோடி கிலோ தேயிலை தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து பற்றாக்குறை மொத்தம் 12 கோடி கிலோவாக உயரும் என தெரிகிறது.

கென்யாவில் நடப்பாண்டில் தேயிலை உற்பத்தி 3.70 கோடி கிலோ சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவிலும், கென்யாவிலும் உற்பத்தி குறையும் என்ற மதிப்பீடுகள் வெளிவந்துள்ள நிலையில், சர்வதேச சந்தையில் தேயிலை விலை உயரும் சூழ்நிலை உருவாகி உள்ளதால், தேயிலை நிறுவனங்களுக்கு வளமான வர்த்தக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் லாப வரம்பு கணிசமாக உயரும் என முன்னணி நிறுவனங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

நல்ல விலை கிடைக்கும்

இது குறித்து குட்ரிக் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் ஏ.என். சிங் கூறும்போது, “சர்வதேச சந்தையில் தேயிலைக்கு நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் தேயிலை நிறுவனங்களின் லாபம் அதிகரிக்கும் சூழல் உருவாகியுள்ளது. அதே சமயம் இனி வரும் மாதங்களில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவினம் உயராமல் இருக்க வேண்டும். ஏற்றுமதிக்கான ஆர்டர்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதனால் அன்னியச் செலாவணி வருவாய் அமோகமாக இருக்கும்” என்று தெரிவித்தார்.